# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 193/நகராட்சி/2018**

**நாள் : 29/03/2019**

**திரு K.M. குப்புசாமி,**
**குடியாத்தம்** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**அரக்கோணம் நகராட்சி,**
**அரக்கோணம்** – **எதிர் மனுதாரர்**

வேலூர் மாவட்டம், குடியாத்தம். பிச்சனூர், கங்காதரசாமி மடாலயத் தெரு, 47 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K.M. குப்புசாமி அவர்களின் 27.08.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 193/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

வேலூர் மாவட்டம், குடியாத்தம். பிச்சனூர், கங்காதரசாமி மடாலயத் தெரு, 47 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K.M. குப்புசாமி என்பவர், தான் அரக்கோணம் நகராட்சியில் 18.01.1990 முதல் 07.09.1994 முடிய வருவாய் உதவியாளராகப் பணியாற்றியதாகவும், பின்னர் குடியாத்தம் நகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணியாற்றி 31.12.1996 அன்று வயது முதிர்வின் காரணமாகப் பணி ஓய்வு பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தான் அரக்கோணம் நகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணியாற்றிய காலத்தில் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வருங்கால வைப்பு நிதிக்கு வட்டித் தொகை வழங்கப்படவில்லையென்று தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேலும், ஓய்வு பெற்று 21 ஆண்டுகள் ஆகின்றன என்றும், 79 வயது எய்திய நிலையில் தன்னால் நகராட்சி அலுவலர்களை தொடர்பு கொள்ள இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையரிடம் விளக்கம் பெறும் பொருட்டு 26.03.2019 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு அழைக்கப்பட்டார். தேர்தல் பணி காரணமாக நகராட்சி ஆணையர் விசாரணைக்கு வரவில்லை. எனினும், அன்றைய நாள் விசாரணையில் அரக்கோணம் நகராட்சி உதவியாளர் விசாரணைக்கு வருகை தந்து நகராட்சி ஆணையரின் அறிக்கையினை சமர்ப்பித்தார். 1988–89 முதல் 2010–11 முடிய உள்ள சேமநல நிதிக்கான வட்டிப் பிரேரணைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரரின் சேமநல நிதிக்கான வட்டித் தொகைக்கு உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநரக ஒப்பளிப்பு பெற்றவுடன் முன்னுரிமை அடிப்படையில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு வட்டித் தொகை வழங்கப்பட்டு விடும் என்று அரக்கோணம் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரர் ஓய்வு பெற்று 21 ஆண்டுகள் ஆகின்றன. தற்பொழுது அவர் 80 வயதினை நெருங்கும் நிலையிலும் சேமநல நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படாதது மிகவும் கண்டனத்துக்குரியது. தற்பொழுது நகராட்சி மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் பணிபுரியும் அலுவலர்களும் என்றாவது ஒரு நாளைக்கு பணி ஓய்வு பெறத்தான் போகிறார்கள். தங்களுக்கும் முறையீட்டு மனுதாரருக்கு ஏற்பட்ட நிலை ஏற்பட்டால் தங்களின் மனநிலை எப்படியிருக்கும் என்பதை மனதில் கொண்டு இதுபோன்ற நேர்வுகளில் காலம் தாழ்த்தாது நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென இம்முறைமன்ற நடுவம் வலியுறுத்தி ஆணையிடுகிறது. எனவே, 1988–89 முதல் 2010–11 முடிய உள்ள சேமநலநிதிக்கான வட்டித் தொகை சம்பந்தப்பட்ட தணிக்கைப் பிரேரணையை உடன் முடிவு செய்து, ஓய்வு பெற்ற நகராட்சி அலுவலர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வட்டித் தொகையினை வழங்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினையும் 30 தினங்களுக்குள் சமர்ப்பிக்கும்படியும் ஆணையிடப்படுகிறது.

**2019–ஆம் ஆண்டு மார்ச் திங்கள், 29–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

4/4/19

பெறுநர்

1. திரு K.M. குப்புசாமி,
**எண்.47, கங்காதரசாமி மடாலயம் தெரு,
பிச்சானூர்,
குடியாத்தம் – 632 602.
வேலூர் மாவட்டம்**

2. **நகராட்சி ஆணையர்,
அரக்கோணம் நகராட்சி,
அரக்கோணம்**

3. **நகராட்சி ஆணையர்,
குடியாத்தம் நகராட்சி,
குடியாத்தம், வேலூர் மாவட்டம்.**

4. **நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
வேலூர் மண்டலம்,
வேலூர்.**

5. **நகராட்சி நிர்வாக ஆணையர்,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
**பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி**